JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC 207/2017 |
| | : | Prosecution P.W –6 |
| NAME | : | திரு.தங்கசாமி, மருத்துவர் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 26.02.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது சொக்கம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.03.2016ம் தேதி கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக நான் பணியில் இருந்த போது அன்று மாலை 5 மணியளவில் குமந்தாபுரம், காளியம்மன் கோவில் தெரு, வெள்ளைத்துரையின் மனைவி முத்தாத்தாள் என்பவர் சிகிச்சைக்காக தனியாக என்னிடம் வந்தார். அவரை நான் விசாரித்தபோது அன்றைய தினம் 5 மணியளவில் அடையாளம் தெரிந்த நபர்கள் தன்னை தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்த போது, அவருக்கு வெளிகாயங்கள் எதுவும் இல்லை. உடம்பில் வலி இருப்பதாக கூறினார். அவருக்கு நான் வலி நிவாரண சிகிச்சை மட்டும் செய்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என்று சான்று வழங்கினேன். மேற்படி காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னிடம் சிகிச்சை பெற்ற நபருக்கு வெளிப்படையான காயம் எதுவும் இல்லை என்றால் சரிதான். அவருக்கு வலி இருந்ததாக சொன்னதை பிறரால் உணர முடியாது என்றால் சரிதான். அவர் வலி இருப்பதாக சொன்னது பாவனையாக கூட இருக்கலாம் என்றால் அவ்வாறு சொல்ல முடியாது. என்னுடைய விபத்து பதிவேட்டில் சிகிச்சைக்கு சேரும் போது நான் வயதும், நேரமும் திருத்தியிருக்கிறேன் என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு நான் என்ன பரிசோதனை செய்தேன் என போலிசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். காயம்பட்டதாக சொல்லப்படும் நபருக்கு சாதாரணகாயம் என்று எதனடிப்படையில் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சாதாரணமாக வந்து வலி இருப்பதாக சொன்னதால் சொன்னேன். காயம்பட்ட நபர் எதை வைத்து தாக்கினார் என சொல்லவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }

Miscellaneous } Case No : - CC 207/2017

: Prosecution P.W –5

NAME : கண்ணன்

FATHER'S NAME :

VILLAGE :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 26.02.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.4 குருசாமி என்பவரை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 5, 6 வருடங்களுக்கு முன்பு எனது சொந்தவேலையாக நான் காவல் நிலையம் சென்றபோது போலிசார் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் செய்து கொடுத்தேன். மேற்படி பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியிடு செய்யப்படுகிறது. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 07.03.2016 ம் தேதியன்று 10.00 மணிக்கு நானும், அ.சா.4 ம் வழக்கின் சம்பவயிடம்

அருகே பேசிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த கடையநல்லூர் காவல் உதவி ஆய்வாளர், கடையநல்லூர் காவல் நிலையக் குற்ற எண்.76/2016 வழக்கின் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், அ.சா.4 ம் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC 207/2017 |
| | : | Prosecution P.W –4 |
| NAME | : | குருசாமி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 26.02.2026.

**முதல் விசாரணை**

**நான் தற்போது குமந்தாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி கண்ணன் என்பவரை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். தேதி, மாதம், வருடம் நினைவில் இல்லை. அந்த கையொப்பத்தை எதற்காக செய்து கொடுத்தேன் என்று தற்போது எனக்கு நினைவில் இல்லை. மேற்படி பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியிடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.**

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

**எங்கள் ஊரில் முத்தாத்தாளை எனக்கு தெரியும். அந்த முத்தாத்தாளுக்கும் இந்த வழக்கின் எதிரி பாப்பாத்திக்கும் சண்டை நடந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. போலிசார் அப்போது எங்கள் ஊருக்கு வந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.**

போலிசார் விசாரணையின் போது கடந்த 07.03.2016ம் தேதியன்று 10.00 மணிக்கு நானும், சாட்சி கண்ணனும் வழக்கின் சம்பவயிடம் அருகே பேசிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த கடையநல்லூர் காவல் உதவி ஆய்வாளர், கடையநல்லூர் காவல் நிலையக் குற்ற எண்.76/2016 வழக்கின் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், கண்ணனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC 207/2017 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | சூசைமரியான் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 26.02.2026.

**முதல் விசாரணை**

**நான் தற்போது தாட்டாண்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எங்கள் ஊர்க்காரர். பட்டியல் சாட்சி.1 மரியதாஸ் என்பவரை தெரியும். அவர் இறந்துவிட்டார். சாட்சிகள் ஜோசப், முருகன் ஆகியோர்களை தெரியும். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிக்கும், எங்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டது. தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்று சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன். வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை. பிரச்சனை பெரிதாகிவிடக்கூடாது என்பதற்காக பட்டியல் சாட்சி.1 மரியதாஸ் காவல்நிலையம் சென்றார். தற்போது என்னிடம் புகார் மனுவிலுள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. மேற்படி புகார் மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.**

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 29.01.2022ம் தேதியன்று மாலை 01.30 மணியளவில் ஆஜர் எதிரி கையில் கம்புடன் எங்கள் ஊரில் உள்ள தேவாலயத்தில் அத்துமீறி நுழைந்தார் என்றால் சரியல்ல. தேவாலயத்தின் தூண்களின் மீதிருந்த லைட் மற்றும் பந்தல்களை அடித்து சேதப்படுத்தினார் என்றால் சரியல்ல. அதை தட்டிக் கேட்ட என்னையும் பட்டியல் சாட்சி.1 மரியதாஸ், சாட்சி ஜோசப்பையும் பொதுயிடத்தில் வைத்து அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. எதிரி மீது நடவடிக்கை எடுக்க பட்டியல் சாட்சி.1 காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi